**04.01.2024 OS.73/2022** வா.சா. 1- திருமதி. ராகவி

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் கோயம்புத்துாரில் இருந்து வருகிறேன். கடந்த 5 வருடமாக குடியிருந்து வருகிறேன். எனக்கு 2008ம் திருமணம் நடந்தது. தாவா சொத்தின் சர்வே எண்28/24 என்னுடைய திருமணத்திற்கு முன்பு 2006ல் எனது மாமனார் தாவா சொத்தை கிரையம் வாங்கினார். விஜயா கணவரின் அண்ணன் மனைவி எனது கணவருடன் பிறந்தவர்கள் எனது கணவரை சேர்ந்து நான்குபேர். மூத்தவர் கண்ணன் பிரதிவாதியின் கணவர். எனது திருமண காலத்தில் கண்ணன் வெளிநாட்டில் இருந்தார். அவருடன் பிறந்த மற்ற 2பேரும் வெளிநாட்டில் நான் இருந்தார்கள். கண்ணன் அவரது சகோதரர்களை வெளிநாட்டிற்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். எனது மாமனார் வயது 85. அவர் வீட்டில் தான் உள்ளார். எனது திருமணகாலத்திற்கு முன்பே வீட்டில் தான் உள்ளார். தாவா சொத்தை எனது மாமனார் கிரையம் வாங்கியது எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்தை கிரையம் வாங்கியதற்கு எனது கணவர் தான் பணம் கொடுத்தார். தாவா சொத்தை பிரதிவாதி வெளிநாட்டில் இருக்கும் போது பொது குடும்பத்திற்காக 3 ஆண்மக்களுக்குகாக எனது மாமனார் பெயரில் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. 2015 ஆண்டு தாவா சொத்தை எனது மாமனார் 3 ஆண்மகன்களுக்கு பாகம் பிரித்து கொடுத்ததுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஏர்டெல் டவர், கடை கட்டிடம் உள்ளது. ஏர்டெல் டவர் 2010ல் வைக்கப்பட்டது. ஏர்டெல் டவர் வைப்பதற்கு எனது மாமனார் பெயரில் கிரையப்பத்திரம் இருந்ததால் அவருடன் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. கடந்த 1 ½ வருடமாக ஏர்டெல் வாடகையை நான் வாங்கிவருகிறேன். அதற்கு முன்பு வாடகையை எனது மாமனார் வாங்கினார். தாவா சொத்து விஸ்தீரனம் 12 ½ சென்ட். ஆளுக்கு 4சென்ட் வீதம் 3 ஆண்மகன்களுக்கும் பிரித்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு வடபுறம் கடை, ஓட்டு கொட்டகை ஆகியவை உள்ளது. எந்த வருடம் எனது மாமனார் ஓட்டு கொட்டகை போட்டார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி தான் தன்னுடைய கணவர் பாகத்தில் கூரை கொட்டகை போட்டார் என்றும் அந்த கூரை கொட்டகை உடையந்த பிறகு ஓட்டு கொட்டகை போட்டார்

என்றால் சரியல்ல. தற்போது பிரச்சனை வந்த பிறகு அந்த ஓட்டு கொட்டகையில் பிரதிவாதி மாடி கட்டி வைக்கோல் வைத்துள்ளார். எனது மாமனார் இருக்கும் போதே 2015ம் ஆண்டு மாட்டு கொட்டகை வைத்து அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த மாட்டு கொட்டகைக்கு முன் பக்கம் ஒரு கடை உள்ளது. அந்த கடையை பிரதிவாதி 2017 கடைகட்டிடனார் என்று சொன்னால் சரியல்ல எனது மாமனர்தான் கடை கட்டினார் பிரதிவாதி அத்துமீறி 2018ல் உள்ளேனுளைந்து விட்டார். பிரதிவாதி தான் கடையை கட்டி அவர் பெயரில் மின் இணைப்பு, வரி ரசீது உள்ளது என்றால் சரியல்ல. எனது மாமனார் பெயரில் வரிரசீது, மின்இணைப்பு கிடையாது. அந்த கடையை அடுத்து ஏர்டெல் டவர், அடுத்து தென்புறம் தென்னை மரங்கள் உள்ளது. டவர் உள்ளதால் அதற்கு பாதுகாப்பாக சுற்றி முள்வேலி போடப்பட்டது. பிரதிவாதியின் கணவரின் பாகம் என்பதால் அவரையும் இந்த வழக்கின் தரப்பினாரக சேர்ந்து இருப்பதாக சொன்னால் சரியல்ல. என்னுடைய கொழுந்தன் கோயம்புத்தூரில் இருந்தார். வழக்கு போடுவதற்குமுன்பு வந்துவிட்டார். அவர் கோயம்புத்தூரில் உணவகம் வைத்து இருந்தார். நஷ்டமாகி போயிருந்தால் ஊருக்கு வந்து விட்டார். பிரதிவாதியுடன் நானும் எனது குடும்பத்தை சேர்ந்த எவரும் பேசுவதில்லை. நத்தத்தில் கடை வைப்பதற்காக அவருடைய பங்கை பணம் கொடுத்து வாங்கிவிட்டிற்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பங்கை கிரையம் கேட்டு கொடுக்கததால் எங்களுக்கும் பிரதிவாதிக்கு பேச்சுவார்த்தை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் 19.12.2021 ல் புகார் கொடுத்தார். காவல் துறை விசாரணையில் எனது மாமனார் சொத்து வாங்குவதற்கு எனது மூத்த மகன் பணம் கொடுத்தார் என்றும் சொத்தை 3 மகன்களுக்கும் பிரித்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. வடக்கு பக்கம் உள்ள கடை, மாட்டு கொட்டகை ஆகியவை பிரதிவாதி போட்டார் என்பதை எனது மாமனார் ஒத்துகொண்டதால் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து பார்த்து கொள்ளுங்கள் என்று போலீஸில் சொல்லிவிட்டர் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் கொடுத்த புகாரின் பெயரில் **FIR** போடப்பட்டது. பிரதிவாதி மீது எவ்வித

**FIR**யாரும்

போடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எனது மாமனார் கிரையப்பத்திரம் எழுதி கொடுத்த பிறகு தான் புகார் செய்தார். நான் கிரையம் வாங்கிய பிறகு போன் மூலமாக பிரதிவாதி தாவா இடத்தில் மாடு கட்டகூடாது கடை நடத்த கூடாது என்று சொன்னேன் போனை இணைப்பை துண்டித்து விட்டார் அதன் பிறகு நேரில் வந்தேன் முடிந்ததை பார்த்து கொள்ளுங்கள் காலி செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். பிரதிவாதி நேரில் சென்று காலி செய்து தரும்படி சொன்னதை பிராதில் சொல்லவில்லை. தாவா சொத்தில் இருந்து பிரதிவாதியை வெளியேற்ற வேண்டும் என்று வழக்கு போடவில்லை என்று சொன்னால் அவ்வாறு தான் வழக்கு போட்டு உள்ளேன். தாவா சொத்தை பிரதிவாதியின் கணவர் பொது குடும்பத்திற்காக வாங்கப்பட்டது என்றும் என்னுடைய மாமனாருக்கு சொத்தை வாங்குவதற்கு எவ்வித வருமானமும் கிடையது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனாரை பிரதிவாதி தான் பராமரித்து தான் வந்தார் என்றும் குடிப்பதற்கு பணம் கொடுக்கததால் பிரதிவாதி மற்றம் அவரது கணவருடன் சண்டை போட்டுவிட்டு எனது பெயருக்கு சொத்தை எழுதி வைத்து விட்டார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் வடபுறம் 4 செண்ட் பிரதிவாதியின் கணவருக்கு பாக பாத்தியமானது என்று அதில் தான் பிரதிவாதி மாட்டு கொட்டகை கடை வைத்தது நடத்தி வந்து உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் இந்த பிரதிவாதியை பொருத்து எந்த பரிகாரமும் கிடைக்க கூடியதில்லை என்று சொன்னால் சரியல்ல.